# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST – 2008

## ECS 3.21 – ECONOMICS OF POPULATION

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. மல்தஸின் சனத்தொகை பற்றிய எண்ணக்கருவை விளக்கி அவை ஏன் பொருளாதார அரங்கில் நீண்ட காலம் ஓரங்கட்டப்பட்டன என்பதற்கான காரணங்களைப் பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

02. "வருமானம் உழைப்பதற்கு வேறு மூலகங்கள் இல்லாத நிலையில், ஊழியத்தை அதிகரித்து தமது வருமானத்தை கூட்டிக் கொள்வதற்கு பின்பற்றப்பட்ட மாற்றுவழியே சனத்தொகைப் பெருக்கமாக அமைந்தது". ஆராய்க.

(20 புள்ளிகள்)

03. (அ) சனத்தொகை நிலைமாறல் கோட்பாடுகளிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(08 புள்ளிகள்)

(ஆ) சனத்தொகையின் சமகால நிலைமாறல் போக்கின்மீது செல்வாக்குச் செலுத்திய காரணிகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

04. நவீன மல்தூஸிய வாதிகளின் சனத்தொகை பற்றிய கருத்துக்களுக்குப் பின்னணியாக இருந்த காரணிகளை விளக்குக.

(20 புள்ளிகள்)

05. (அ) 'பசுமைப் புரட்சி' என்பதனால் கருதப்படுவது யாது?

(10 புள்ளிகள்)

(ஆ) இருபதாம் நூற்றாண்டின் பிந்திய தசாப்தங்களில் பசுமைப்புரட்சி சனத்தொகைச் சிந்தனைகளில் எத்தகைய செல்வாக்கைச் செலுத்தியது என விளக்குக.

(10 புள்ளிகள்)

06. 'சனத்தொகை விவாதம்' (Population Debate) என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

(20 புள்ளிகள்)

07. 1981 – 2001 காலப்பகுதியில் இலங்கையின் சனத்தொகைப் போக்கு, கட்டமைப்பு போன்றவற்றில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களை விளக்குக.

(20 புள்ளிகள்)

08. எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பெழுதுக.

i. கருவளவீதம்

ii. சிறுவர் தங்கி நிற்றல்

iii. சனத்தொகைப் பிரமிட்டுக்கள் (Population Pramyds)

iv. சனத்தொகை முகாமைத்துவம்

v. நகராக்கமும் சனத்தொகைப் பெருக்கமும்.

(தலா 04 புள்ளிகள்)

*****